DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.171/2019

Deposition of Witness { PW.14
{ Prosecution
{

Name : செந்தில்குமார்
Father's Name : ---
Taluk :---
Calling :---
Religion :---
Age :---

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.14 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

8, 18, 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் மல்லசமுத்திரத்தில் வசிக்கிறேன். நான் மகுடஞ்சாவடியில் பத்திர எழுத்தராக தொழில் செய்து வருகிறேன். நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். எனக்கு ஒரு மகள் இருக்கிறார். அவர் இந்த வழக்கு சமயத்தில் 5 அல்லது 6 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். என்னுடைய ஆவண எழுத்தர் உரிம எண்.A/880/NMK/1999. இந்நிலையில் கடந்த 2007 ம் ஆண்டு

கச்சுப்பள்ளியை சேர்ந்த சடையன் என்பவர் தானசெட்டில்மெண்ட் இரத்து பத்திரம் எழுதுவதற்காக என்னை அணுகினார். அவர் கேட்டு கொண்டதன் படி 05.09.2007 ம் தேதி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்தேன். மேற்படி ஆவணம் கச்சுப்பள்ளி கிராமத்திலுள்ளது. அதன் விஸ்தீரணம் 2.29 ஏக்கர். நான் பதிவு செய்து கொடுத்த ஆவணத்தின் பதிவெண் தெரியாது. அ.சா.ஆ.2 வரிசையில் 4 வது ஆவணம் நான் எழுதி கொடுத்தது தான். அதே தேதியில் மேற்படி சடையன் கேட்டு கொண்டதற்காக இதே சொத்தை பொறுத்து தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோருக்கு கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்தேன். அதன் பதிவெண் தெரியாது.  அது அ.சா.ஆ.2 வரிசையில் 5 வது ஆவணம் தான். அதன் பிறகு சுமார் ஒரு மாதம் கழித்து கணபதி, கோவிந்தராஜ், தங்கவேல் ஆகியோர் பெயருக்கு மேற்படி தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோருக்காக ஒரு கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்தேன். அது அ.சா.ஆ.2 வரிசையில் 6 வது ஆவணம் தான். இந்த ஆவணங்கள் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலீஸ் விசாரணையின் போது எனது ஆவண எழுத்தர் உரிம எண்.A/886/NMK/1999 என்று நான் சொல்லவில்லை. ஆவண எண்களையும் நான் போலீசாரிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. 05.09.2007 அன்று சடையன் மற்றும் கிரையம் பெற்ற 2 நபர்கள் தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோர்கள் தான் சார்பதிவாளர் அலுவலகம் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். இவர்களை தவிர மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்தவர்களும் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்காக நான் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கும் வேலையை சுமூகமாக செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

(3 ம் எதிரியை தவிர மற்ற எதிரிகள் 1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தங்களுக்காக ஏற்றுக்கொள்கிறார்கள். 3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. )

Sd/-செந்தில்குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.